<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

<u>நாள் – 11.11.2025</u>

**OS.102/2018**

**வா.சா.1 திரு.அலாவுதீன்பாஷா**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்தை விலைபேசி ஒப்பந்தம் செய்துள்ளேன் அதன்படி கிரையம் செய்து கொடுக்கவில்லை, அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கிரசர் வைத்து தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் கிருஸ்துவ மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். நான் முஸ்லிம் மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சின்னதம்பி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சின்னதம்பியின் வாரிசுகள் 6 பேர் 1. மேத்யூ 2. பொன்னுதாயி 3. நாயகியம்மாள் 4. சமாதானம் 5. இருதயம் 6. செல்வம் ஆகியோர் அவர்களில் 1. மேத்யூ 2. பொன்னுதாயி. 3. சமாதானம் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் வருவாய் ஆவணத்தின்படி இறந்துபோன சின்னதம்பி என்பவருக்கு வாரிசுகள் 1. சகாயம், 2. இருதயம் 3. செல்வம் 4. மேத்யூஸ் மனைவி லூர்துஅம்மாள் மகன் ராஜா மற்றும் மற்றொரு மகன் பத்ரிநாதன் ஆகியோர் தான் அவர்களிடம்தான் நான் ஒப்பந்தம் செய்து கொண்டேன்.

2. 10 ம் பிரதிவாதியான வேளாங்கண்னி என்பவர் மேத்யூ என்பவரின் வாரிசு என்று சொன்னால் சரிதான், நான் பார்க்கும்போது

வருவாய்ஆவணத்தில் லூர்துஅம்மாள் பெயர்தான் இருந்தது அவர் வழக்கு நிலுவையில்இருக்கும்போது இறந்துவிட்டதால் வேளாங்கன்னி என்பவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். தாவா சொத்துக்கள் என்பவது நான் சொல்லியுள்ள இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு மட்டும் சொந்தம் அல்ல பொன்னுதாயின் வாரிசுகள் 8 பேர், 1. ஜான்பால் 2. தேவராஜ் 3. நெல்சண்மண்டேலா 4. மேரி 5. தெரசா 6. செலினா 7. அதிசயமேரி 8. அன்னம்மாள் ஆகியோர். மேத்யூ என்பவரின் வாரிசு வேளாங்கண்னி, சமாதானம் என்பவரின் வாரிசான சவுரியம்மாள் என்பவருக்கும், சின்னதம்பியின் மகள் நாயகிஅம்மாள் என்பவருக்கும் சொத்தில் பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல, நான் வருவாய் துறை ஆவணங்களை பார்க்கும்போது 1. சகாயம், 2. இருதயம் 3. செல்வம் 4. மேத்யூஸ் மனைவி லூர்துஅம்மாள் மகன் ராஜா மற்றும் மற்றொரு மகன் பத்ரிநாதன் ஆகியோர் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் இருந்தது அவர்கள்தான் வாரிசுகள்.

3. வருவாய் ஆவணங்களை பார்த்துதான் நான் ஒப்பந்தம் செய்ததாக சொல்கிறேன் அந்த வருவாய் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வாதுரையில் அந்த வருவாய் ஆவணம் இணைக்கப்பட்டுள்ளதாக ஆவணபட்டியலில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை, ஆனால் ஒப்பந்த பத்திரத்திலேயே அது இணைக்கப்பட்டுள்ளது. தாவா ஒப்பந்த பத்திரம் எழுதி கையொப்பம் பெறப்பட்டதாக சொல்லும்போது சின்னதம்பியின் வாரிசுகளான 1.மேத்யூ 2. பொன்னுதாயி 3. நாயகிஅம்மாள் 4. சமாதானம் 5.

இருதயம் 6. செல்வம் ஆகியோரிடம் நான் கையொப்பம் பெறவில்லை என்றால் சமாதானம், இருதயம், செல்வம் ஆகியோர் பெயரும் மற்றவர்களின் பெயரும் வருவாய் ஆவணங்களில் இருப்பதால் அவர்களிடம் கையொப்பம் வாங்கினேன், மேத்யூ, பொன்னுதாயி நாயகிஅம்மாள் ஆகியோரிடம் கையொப்பம் வாங்கவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.1 ல் வருவாய் ஆவணம் இணைத்ததாக சொல்லியுள்ளேன் இறந்துபோன சின்னதம்பியின் வாரிசு சான்றிதழ் அதில் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் வாரிசு சான்றிதழ் இணைக்கப்படவில்லை, நேரடியாக வருவாய் ஆவணமான சிட்டாவில் பெயர் வருபவர்களிடம் மட்டும் கையொப்பம் வாங்கினேன். உடன்படிக்கை ஆவணத்தில் சின்னதம்பியின் வாரிசான நாயகிஅம்மாள் என்பவரிடம் கையொப்பம் பெறாமல் அந்த உடன்படிக்கை உள்ளது என்றால் சரிதான், வருவாய் ஆவணங்களில் அவர் பெயர் இல்லாததால் அவர் தேவையில்லை என்று அவரிடம் கையொப்பம் பெறவில்லை.

5. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எந்த தேதியில் கிரையம் பேசப்பட்டது, அட்வான்ஸ் தொகை எப்போது கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் தொகை சொல்லப்பட்டுள்ளது ஆனால் நான் தேதி சொல்லவில்லை. நான் சொல்வதுபோல எந்த கிரயமும் பேசப்படவில்லை, பணமும் கொடுக்கப்படவில்லை, உண்மையில் அவ்வாறு கிரையம் பேசி பணம் கொடுக்கப்பட்டிருந்தால் தேதியை குறிப்பாக சொல்லியிருப்பேன் அது பொய் என்பதால்தான் நான் சொல்லவில்லை

என்றால் சரியல்ல. உடன்படிக்கை காலத்தில் பிரதிவாதிகள் ரூ.8,50,000 பெற்றதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல.

6. தாவாசொத்தை ஊர்பொதுவர்களை வைத்து பதிவு செய்து கொடுக்கசொல்லி பலமுறை நான் கேட்டதாக சொல்லுவது எல்லாம் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல, அவைகள் அனைத்தும் உண்மைதான். தாவாசொத்தை ரூ.8,75,000க்கு விலைபேசி ரூ.8,50,000ம் அட்வான்சாக கொடுத்தேன் என்று சொல்லுவது பொய்யானது அவ்வாறு எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள இடத்தில் கல்குவாரி கிரசர் வைத்து நான் தொழில் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய்யானது, நான் தாவா சொத்து உள்ள இடத்தில் அராஜகமாக உள்நுழைந்து கிரசர்வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு அருகில் செட் ஒன்றுபோட்டு அதற்கு மின்இணைப்பும் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. நான் தாவாசொத்தில் கிரசர்வைத்து பெரிய மிசினரி வைத்து எம்சேன்ட், ஜல்லி தயாரித்து தொழில்செய்து வருகிறேன் மேலும் தாவா சொத்தில் எனது பெயரில் சட்டத்திற்கு முரணாக பட்டாவும் பெற்றுள்ளேன் என்றால் இல்லை.

7. தாவா சொத்துக்கு அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்றால் சர்வே எண்.61/2B என்பது அரசு புறம்போக்கு நிலம் அந்த நிலத்தில் 2010 ல் நான் குவாரி தொழில் நடத்துவதற்காக டென்டர் விடப்பட்டு நான் டென்டர் எடுத்துள்ளேன். மேற்படி ஆவணகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியுமா என்றால் ஆஜர்படுத்தமுடியும். 10ம்

பிரதிவாதியின் அனுமதி இல்லாமல் கற்கள் எடுத்து விற்பனை செய்வது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல, நான் தாவா சொத்தில் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எப்போது தாவா சொத்திற்கு விலைபேசப்பட்டது எப்போது அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, 28.05.2017 என்று சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை, அவ்வாறு நடந்திருந்தால் குறிப்பாக சொல்லியிருப்பேன் என்றால்சரியல்ல. வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரம் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் எங்கு வைத்து கொடுத்துள்ளேன் என்றால் மாவேரிப்பட்டியில் நான் கிரசர்வைத்து தொழில் செய்யும் இடத்தில்தான் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் ஒப்பந்த பத்திரத்தில் உள்ள 6 நபர்களும், சாட்சிகள் இருவரும் இருந்தார்கள். அவர்கள் பெயர் என்ன என்றால் 1.சகாயம், 2.இருதயம், 3. செல்வம், 4. லூர்தம்மாள், 5. ராஜா, 6. பத்ரிநாதன் மற்றும் சாட்சிகள் சகாயத்தின் மகன் அந்தோணி மற்றும் செல்வராஜ் என்பவர்.

8. நான் அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொல்லுவது வங்கியில் இருந்து எடுத்தேனா என்றால் நான் கையில் இருந்த ரொக்கத்தை தான் கொடுத்தேன். நான் எப்போதும் 8 இலட்சம் அல்லது 10 இலட்சம் கையில் வைத்திருப்பேனா என்றால் அன்று கிரையம் பேசவேண்டும் என்பதற்காக கொண்டுவந்தேன். தாவா சொத்து தற்போது ஒரு சென்ட் என்ன விலைக்கு

விற்பனை ஆகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஒப்பந்தம் போட்டதாக சொல்லும் தேதியில் ஒரு செண்ட் எவ்வளவு விலைக்கு சென்றது என்றால் செண்ட் கணக்கில் பேசவில்லை, 2 ஏக்கர் 97 செண்ட் ரூ.8,75,000/—க்கு விலைபேசினோம்.

9. தாவா சொத்திற்கு என்னுடைய பணபலத்தை பயன்படுத்தி எனது பெயரை இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி பொய்யாக இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்த சின்னதம்பியின் வாரிசுகளான சின்னதம்பியின் மகள் நாயகிஅம்மாள், சின்னதம்பியின் இறந்துபோன மகள் பொன்னுதாயின் வாரிசான இறந்துபோன மேத்லிங், மேத்லிங் வாரிசான மேரி ஆகியோரை தாவாவில் தரப்பினராக சேர்க்காததால் இந்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவா ஒப்பந்த பத்திரத்தில் சின்னதம்பியின் சட்டப்படியான வாரிசுகளை தரப்பினராக சேர்த்து ஒப்பந்தம் செய்யாததாலும், சின்னதம்பியின் சட்டப்படியான வாரிசுகளை இந்த தாவாவில் தரப்பினராக சேர்க்காததால் அந்த காரணத்திற்காகவே இந்த தாவா Non Joinder of necessary parties என்று தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல, வருவாய் ஆவணங்களின்படி உள்ளவர்களிடம் நான் ஒப்பந்தம் செய்தேன். நான் உண்மை சம்பவங்களை மறைத்து ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தை பொறுத்து சின்னதம்பியின் மகள் நாயகியம்மாள் ஒரு பாகப்பிரிவினை வழக்கு 2015 ல் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான், பின்னிட்டு அது தள்ளுபடி ஆகிவிட்டது. அந்த வழக்கானது வாதி ஆஜராகததால்தான் வாதிக்கு உடல்நிலை சரியில்லை என்று நீதிமன்றத்தில் ஆஜராகததால்தான் அது தள்ளுபடி செய்யப்பட்டது அது முழுவிசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.11 17:20:24 +0530